# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2024 கன்னி (செப்) விலை உருபா 1-50 (இதழ் எண்: 165)


## ஏழு மாதங்களாகத் 'தடா'-வின் கடுஞ்சிறைக்குள் இருந்த நம் பாவலரேறு அவர்களுக்குப் பிணையலில் விடுதலை!

# தமிழர் நலம் நாடும் அமைப்பு-களின் விடா முயற்சியைக் கண்டு அரசு பணிந்தது!

கடந்த 27-1-93—அன்று 'தடா'வின் கீழ்த் தளைப்படுத்தப்பட்டுக் கடந்த ஏழு மாதங்களாகக் கடுஞ் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள், நம் அருந்தமிழ் ஐயா அவர்கள்.

ஐயா அவர்களைப் பிணையலில் விடுதலை செய்யச் சொல்லி இரண்டு முறை பிணையல் போடப் பெற்றும், அப் பிணையல் வேண்டுகையை தள்ளுபடி செய்து விட்டனர் நடுவர்கள்.

மூன்றும் முறையாகக் கடந்த 10-8-93—அன்று நம் வழக்கறிஞர் திரு. கலைமணி அவர்கள் பிணையல் வேண்டுகையைப் பதிவு செய்தார். பிணையலுக்கான வழக்காடு நாளாக நடுவர் 17-8-93 அன்று தள்ளி வைத்தார். 17-8-93-இல் அரசு வழக்கறிஞர் திரு. இராமரத்தினம் அவர்கள் மேலும் ஒரு கிழமை தள்ளிவைக்கும்படி கேட்க, நடுவரும் சென்ற 26-8-93—அன்று தள்ளி வைத்தார்.

26-8-93—அன்று காலை 10-30 மணிக்கு 'தடா' 2-ஆம் சிறப்பு வழக்குமன்றம் கூடியது. தொடக்கத்தில் பிற வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்த நடுவர் இராதாகிருட்டிணன், பதினொரு மணிக்கு நம் பாவலரேறு ஐயாவின் பிணை வழக்கை எடுத்தார்.

Scanned with CamScanner

வழக்கறிஞர் கலைமணி தம் ஆவணங்களை யெல்லாம் முறைப்படுத்திக் கொண்டு பேசினார்:

'அவர் எவ்வளவு காலமாக உள்ளே இருக்கிறார்? 'அவருக்கு என்ன அகவை;
—என்று நடுவர், நம் வழக்கறிஞரைப் பார்த்துக் கேட்டார்.

கடந்த ஏழு மாதங்களாக—என்றும், 62 அகவை அவருக்கு ஆகிறது என்றும் நம் வழக்கறிஞர்- நம் ஐயாவைப் பற்றி எடுத்துக் கூறிவிட்டுத்,

'தமிழ்நிலம்' இதழ் எண்: 155, 159-இல் வந்த பகுதிகளைச் சுட்டி அக் கருத்துகள் எந்த அளவில் ஞாயமானவை என்பதையும் வழக்கறிஞர் கலைமணி அவர்கள் விளக்கம் கூறிப் பேசினார்.

"இவர் இப்படியான கருத்துகளை எழுது-வதுதான் வன்முறையைத் தூண்டி விடுகிறது என்றால், சில நாட்களுக்குமுன் தமிழக முதல்வர் காவிரிச் சிக்கலுக்காக உண்ணா நோன்பு இருந்த போது ஏற்பட்ட வன்முறை நிகழ்வுகள் முதல்வரால் தூண்டப்பட்டன என்று சொல்ல முடியுமா? ஆக, முதல்வர் என்ன தேவைக்காக இந்திய நடுவண் அரசை எதிர்த்து உண்ணா நோன்பு இருந்தாரோ அதே போன்றதான காரணங்களுக்காகத்தான் இவரும் இந்திய நடுவண் அரசை எதிர்க்கிறார்" என்றும்,

"தமிழர்க்கான உரிமை ஏதும் கிடைக்காத போது, தன்னுரிமைக்காக முழங்குவதும், அதுவும் கிடைக்காதபோது விடுதலை என்பதுமே தேவை-யாகிறது என்று குறிப்பிடுவதும் எந்த வகையில் தவறானது"
—என்றும் வழக்கறிஞர் வழக்காடினார்.

அச் சூழலில் நடுவர் 'தன்னுரிமை என்றால் என்ன?"—என்று கேட்க,

நம் வழக்கறிஞர் அ'து ஒரு 'கூட்டரசை அமைப்பதான முறை' (Fedral set up)- என்று விளக்கமளித்தார்.

தொடர்ந்து நம் வழக்கறிஞர்—ஐயா அவர்-களின் உடல்நிலை பற்றியும் எடுத்துக் கூறினார். முன்பாவே, சிறை மருத்துவர்கள் அளித்த மருத்துவச் சான்றிதழ்களையும் எடுத்துக் கொடுத்-தார்.

இவை யாவற்றையும் பெற்ற நடுவர் 'தமிழ்-நிலம்' இதழ் எண்:155 இன் முதல் பக்கச் செய்தியை முழுமையாகப் படித்துப் பார்த்தார்.

முடித்தபின், அரசு வழக்கறிஞரைப் பார்த்து 'நீங்கள் என்ன சொல்கிறீர்கள்'—எனக் கேட்க,

அரசு வழக்கறிஞர் இராமரத்தினம் 'அவர் உடல் நிலை பற்றியதான நிலையில் அவரைப் பிணையலில் விடுவதுபற்றி நான் ஏதும் மறுப்புச் சொல்ல-வில்லை; மாறாக அவரின் கருத்துகள் அளவில் அவரைப் பிணையலில் விட, எந்தத் தகுதியும் (Merit) இல்லை"—என்று கூறினார். தொடர்ந்து நடுவர், "அவர் வெளியே என்ன செய்துகொண்டி-ருக்கிறார்?"—என்று கேட்க,

நம் வழக்கறிஞர் "அவர் ஒரு தமிழறிஞர், இதழாசிரியர், பல நூல்கள் எழுதியுள்ளார், அவரின் பல நூல்கள் பல்கலைக் கழகங்களில் பாடங்களா-கக் கூட உள்ளன; இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் அவர் நூல்கள் பெருமதிப்-பைப் பெற்றுள்ளன" என்றார்.

"சரி அவரை அவர் உடல்நிலை கருதியும், அகவை கருதியும் பிணையலில் விடுகிறேன். பத்தா-யிரம் உருவா சொத்துள்ள இரு பொறுப்பாளர்கள் தேவை" என்றார் நடுவர்.

அன்று பிற்பகல் நடுவர் விடுமுறையாதலா-லும் உடனடியாக அப்படியான பொறுப்பாளர்களை அழைத்துவர இயலாது என்பதாலும், பின் நம் வழக்கறிஞரின் கேள்விக்கு இணங்கி, 'நடுவர் இரண்டு வழக்கறிஞர்களையும் பொறுப்பாளர்களா-கக் கொண்டு வருமபடி கூறினார்.

அதன்படி, ஏற்கனவே ஐயாவின் மேல் பெரு-மதிப்பும் பேரன்பும் கொண்ட திரு.பக்தவத்சலமும், க.மு;ச.இ.அவர் துணை வழக்கறிஞர் திரு.மோகன-முரளி க.இ.ச.இ.ஐயா அவர்களுக்குப் பிணையாளர்-களாகப் பொறுப்புறுதி அளிக்கவே, ஐயா அவர்களுக்குப் பிணையல் விடுவிப்புக் கொடுக்கப் பட்டது.

ஐயா அவர்களுக்குப் பிணையல் விடுவிப்புச் செய்தி அன்று பகல் 12மணியளவில் சிறை சென்று தெரிவிக்கப் பெற்றது. ஐயாவுடன் 'தடா'வில் சிறைப்படுத்தப் பெற்றுக் கடந்த ஓராண்டு முதல் இரண்டு இரண்டரை ஆண்டுகளாகச் சிறையிருந்து வரும் தமிழகப் போராளர்கள் இருபத்தைந்து வீர இளநெஞ்சங்களும், அண்மையில் சந்தன வீரப்ப-னோடு தொடர்பு கொண்டிருந்தவர்கள் என்று காவலர்களால் பொய்யாகக் குற்றஞ் சாட்டித்'தடா' வில் தளைப்படுத்தப் பெற்று, ஐயாவின் வளாகத்தி-லேயே அடைத்து வைக்கப் பெற்றிருந்த இருபத்-தொன்பது எளிய ஏழ்மைத் தொழிலாள, உழ-வாண்மை, வணிக உள்ளங்களும் பெருமகிழ்ச்சி-யால் துள்ளிக் குதித்தன.

இந்த மகிழ்வான நிகழ்வுக் கிடையில், ஐயா-வின் பிணையலைத் தெரியாமலேயே திராவிடர் கழகப் பொதுச் செயலாளர், மானமிகு 'கி.வீரமணி அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் மானமிகு சாமிதுரை அவர்களும், திராவிடர் கழக வழக்கறி-ஞரும், ஏற்கனவே 'தடா'வில் சிறைசெய்யப் பெற்றுத் தற்பொழுது பிணையலில் இருக்கும் வழக்கறிஞர் மானமிகு வீரசேகரன் அவர்களும்

Scanned with CamScanner

பாவலரேறு ஐயாவைப் பார்வை காண வந்திருந்தனர். ஐயா, அவர்களை வந்து கண்ணுற்று மகிழ்ந்து, அளவளாவி, பிணையலில் விடுபட்ட செய்தி தெரிவித்து உவகை கொண்டார்கள்.

அவர்கள் வந்து சென்றபின் மாலை 5 மணியளவில் ஐயா அவர்கள் விடுவிக்கப் பெற்றார். ஐயா அவர்கள் பிணையலில் விடுவிக்கப் பெறும் செய்தியறிந்து தமிழர் தேசிய இயக்கத் தலைவர் உயர்திரு. பழ.நெடுமாறன் அவர்கள் ஐயாவை வரவேற்று அழைத்துப்போக வந்து, சிறையதிகாரி அறையில் காத்திருந்தார்.

ஐயா அவர்கள் தாம் சிறையறைக்குள் 'திருக்குறள் மெய்ப்பொருளுரை' எழுதுவதற்காக, ஆய்வின் பொருட்டுக் கொண்டு சென்றிருந்த ஐம்பது அறுபது, இலக்கிய, இலக்கண நூல்கள் அகராதிகள் முதலியவற்றையும் உடைகளையும் எடுத்து வைத்து மூட்டை கட்டிப் புறப்பட்டார்கள். அன்பர்கள் பெருந்துணையாக இருந்தார்கள்.

பின்னர் அன்பர்கள் ஆறுமுகம், செல்லமுத்து, கழரும்பன் முதலியோர் ஆளுக்கு ஒன்றிரண்டு மூட்டைகளை எடுத்துக் கொண்டு சிறையதிகாரி அறையை நோக்கிப் போனார்கள். ஐயா அவர்கள் அறையை விட்டுப் புறப்பட்டவுடன் அங்கிருந்த ஐம்பத்தைந்து அன்புத் தமிழ் நெஞ்சங்கள் கண்ணீர் விட்டு அழத் தொடங்கி விட்டனர். சிலர் வாய்விட்டுத் தேம்பித் தேம்பி அழுதார்கள். ஐயா அவர்களின் கண்களிலும் நீர் வழிந்தது. வளாக இரும்புக் கதவருகில் ஐயா வருகையில், அன்பர்கள் அழுகையை அடக்கிக் கொண்டு 'பாவலரேறு வாழ்க, பாவலரேறு வாழ்க' என்று மிக உரத்த குரலில் முழக்கம் எழுப்பினார்கள். முழக்கம் சிறைச்சாலையையே அதிர வைத்தது. சிறை அதிகாரிகள் அனைவரும் வளாகத்தை நோக்கி விரைந்து வந்து, கைகளை ஆட்டி முழக்கமிடுவதை நிறுத்தக் கூறினார்கள். முழக்கம் இன்னும் வேகமும் உரக்கமும் பெற்றது. பிறகு அதிகாரி ஒருவர் வந்து ஐயாவிடம் முழக்கத்தை நிறுத்தச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டார். ஐயா, பின் தொடர்ந்த அன்பர்கள் பக்கம் திரும்பிக் கையமர்த்தி, முழக்கத்தை நிறுத்தும்படி கேட்டுக் கொண்டார்கள். பின்னர் கண்ணீர்க் கண்களுடன் அனைவரிடமிருந்தும் விடைபெற்றுக் கொண்டு, சிறையதிகாரி அறையில் இருந்த தலைவர் நெடுமாறனை நோக்கி வந்தார்கள்.

தலைவர் நெடுமாறன், ஐயா வருவதைக் கண்டவுடன், ஓடோடி வந்து ஐயா அவர்களை நெஞ்சாரத் தழுவி, சிறிது நேரம் ஆறுதலுற்றுப் பிறகு அன்பு உசாவல் நிகழ்த்திக் கொண்டார்கள்.

அதற்குள் பொத்தக மூட்டைகள் சிறைக்கு வெளியில் கொண்டு செல்லப்பெற்று வைக்கப் பெற்றன. ஐயா, தலைவர் நெடுமாறன் இருவரையும் சிறையதிகாரிகள் வழியனுப்பிவிட்டுச் சிறைக் கதவைச்சாத்தச் செய்தனர்.

வெளியே வழக்கறிஞர்கள் ப.வ.பக்தவத்சலம், மோகனமுரளி ஆகியோர், அன்புள்ளங்கள் பொழிலன், குணத்தொகையன், பாவேந்தன் முதலிய பதின்மருக்கு மேலானவர்கள் ஐயாவை எதிர்கொண்டு வரவேற்றனர். திரு. நெடுமாறன் அவர்களும், திரு.பக்தவத்சலம் அவர்களும் ஐயாவுக்குக் கைத்தறியாடை போர்த்தினர். அன்பர்களின் அளவளாவுக்குப் பின், நெடுமாறன் ஐயாவை அழைத்துத் தாம் கொணர்ந்த தானியில் ஏற்றிக்கொண்டு ஐயாவின் இல்லமிருந்த மயிலார்ப்பூருக்குக் கொண்டு சென்று இல்லத்தில் விட்டுச் சென்றனர்.

அன்று முழுவதும் உள்ளூர் வெளியூர் அன்பர்கள் பலர் ஐயாவை வந்து பார்த்துச் சென்றவாறு இருந்தனர்! —செய்தியாளர். O

---

## தாங்கள் சிறையிருந்த அறையைப் பார்க்கும் போதெல்லாம் உங்கள் நினைவுதான்!

தமிழறிஞர் பாவலரேறு அய்யா அவர்களுக்கு, வணக்கம். நலம் நலமறிய ஆவல். அம்மாவிடமும் குடும்பத்தாரிடமும் எங்களின் அன்பான உசாவலைத் தெரிவியுங்கள்.

அய்யா, தாங்கள் இருந்த அறையைப் பார்க்கும்போதெல்லாம் உங்கள் நினைவுதான். அறையின் முன் அரிமா போல் அமர்ந்திருக்கும் உங்கள் உருவம்தான் எங்களிடம் இல்லை. ஆனால் நீங்கள் எங்களுடன் பேசிய கருத்துகள், நாங்கள் உங்களுடன் பகிர்ந்து கொண்ட கொள்கைகள் எல்லாம் என்றும் எங்களைவிட்டு நீங்காத இன்பமான நினைவுகள். நீங்கள் எங்களுடன் இருந்த 7 திங்களும் 7 நாட்களாக கழிந்தன. இனிமேல் எப்படிக் கழிக்கப் போகிறோமோ?

தங்களிடம் நாங்கள் கற்ற பாடங்கள் படிப்பினைகள் எத்தனை! எத்தனை! அடடா!! நினைக்க நினைக்க நீங்காத இனிக்கும் நினைவலைகள். இந்த அன்புருவான நாள்கள் வேறு யாருக்கும் கிடைத்திருக்காது எங்களைத் தவிர. எங்களுக்கு அரிய கருத்துகளை எடுத்து கூறியதற்கு நன்றி! நன்றி!!

அய்யா, 'தமிழ் நிலம்', 'தமிழ்ச்சிட்டு' 'தென்மொழி' இதழ்களை எங்களுக்கு அனுப்பி உதவுமாறு வேண்டுகிறோம்.

மேலும், 'தினப்புரட்சி' 'முரசொலி' நாளிதழ்கள் எங்களுக்குக் கிடைக்க ஆவன செய்யுமாறு வேண்டுகிறோம்.

—இவண், தங்களின்
வெ. மாரிமுத்து,
'தடா'-சிறையாளி நடுவண்சிறை, சென்னை-3

# புரட்சிகர இளைஞர் முன்னணி!

*(கொடுநெறி செயலலிதா அரசால் தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்கள் 'தடா' சட்டத்தின் கீழ் சிறை செய்யப்பட்டிருப்பதைக் கண்டித்து மே, சூன் மாதங்களில் 'புரட்சிகர இளைஞர் முன்னணி' நாடாளாவிய இயக்கம் ஒன்றை மேற்கொண்டது. இவ்வியக்க நிகழ்ச்சிகளின் தொகுப்பு இங்கு வெளியிடப்படுகிறது.)*

கொடுநெறி செயலலிதா அரசால் "தடா" சட்டத்தில் சிறைசெய்யப்பட்டுச் சிறையிலடைக்கப் பட்டிருந்த தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களை விடுவிக்ககோரி இயக்கங்களைக் கட்டமைக்குமாறு தமிழ்நாடு மார்க்சிய இலெனினியக் கட்சியில் நடுவண் அமைப்புக்குழு 28, மீனம், 2024 (10, ஏப்ரல் 93)-இல் அறைகூவல் ஒன்றை விடுத்தது. ஐம்பதாயிரம் துண்டறிக்கைகளையும், ஐயாயிரம் சுவரொட்டிகளையும் ந.அ.கு. வெளியிட்டு இயக்கத்தைத் தொடங்கி வைத்தது. ந.அ.கு.வின் அறைகூவலையடுத்து, 'புரட்சிகர இளைஞர் முன்னணி' (பு.இ.மு) மாநாடு, பேரணி, அரங்கக் கூட்டம், பொதுக் கூட்டம் என்ற முறையில் தமிழகம்—பெங்களூர்—புதுவை தழுவிய அளவில் இயக்கத்தைக் கட்டமைத்தது.

தமிழகத்தின் பத்தொன்பது மாவட்டங்களை உள்ளடக்கி நடுவங்களில் மாநாடுகளும் ஐந்து நடுவங்களில் அரங்கக்கூட்டமும், பெங்களூர், புதுவையில் முறையே மாநாடும் அரங்கக்கூட்டமும் புரட்சிகர இளைஞர் முன்னணியின் பகுதி, மாவட்ட அமைப்புகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது. இதில் நான்கு மாநாடுகளும் இரண்டு அரங்கக்கூட்டங்களும் ஈரோட்டில் பேரணி, பொதுக்கூட்டமும் காவல்துறையினரால் தடைசெய்யப்பட்டன.

இவ்வியக்கத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட புரட்சிகர, குடிநாயக அமைப்புகளும், ஐம்பதுக்கும் மேற்பட்ட தனிநிலை அறிவாளிகள், அறிஞர்களும் பங்கேற்றனர். பு.இ.மு.சாரபில் வெளியிடப்பட்ட ஓர் இலக்கம் துண்டறிக்கைகள், பதினைந்தாயிரம் சுவரொட்டிகள் மூலமாகவும் பரவலான சுவரெழுத்துகள் மூலமும் இலக்கக்கணக்கான மக்களிடையே கருத்துப்பரப்பல் (பிரச்சாரம்) எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

*இயக்கம்:* சென்னை (19 மேழம், 2 மே), தருமபுரி (6 விடை, 19 மே), திருப்பத்தூர் (வ.ஆ.அ. 11 விடை, 24 மே), பெங்களூர் (3விடை,16மே,) ஈரோடு(27மேழம்,10மே), மதுரை (16 விடை, 29 மே) நெல்லை (6 விடை 19 மே) ஆகிய ஏழு நகரங்களில் மாநாடுகளுக்கும், வேலூர் (3 விடை 16 மே), திருவண்ணாமலை. (2 விடை, 15 மே) புதுவை (18 விடை,31 மே), திருச்சி (7 விடை 20 மே)," திண்டுக்கல் (20 விடை, 2 சூன்), காரைக்குடி (1 விடை 14 மே), கோவை (24 விடை, 6 சூன்) ஆகிய ஏழு நகரங்களில் அரங்கக்கூட்டங்களுக்கும் திட்டமிடப்பட்டன.

ஈரோட்டில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றமாநாடு எழிச்சிகரமாக நடைபெற்றது. பெரும் திரளான சிற்றூர்(கிராம)ப்புற கவி உழவர்கள் பங்கெடுத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது. பெங்களூர், மதுரை மாநாடுகளும் திருவண்ணாமலை, புதுவை, திருச்சி, திண்டுக்கல், கோவை அரங்கக் கூட்டங்களும் எழுச்சியுடன் நடை பெற்றன. சென்னையில் மாநாடு தடைசெய்யப்பட்டாலும் பு.இ.மு. தோழர் ஒருவரின் புரட்சிகர குடும்பத் தொடக்கவிழா நிகழ்ச்சியுடன் (6 ஆடவை 20 சூன்) பெருஞ்சித்திரனார் விடுதலை கோரும் கூட்டமும் நடைபெற்றது. அனைத்து இடங்களிலும் பெருமளவிலான புரட்சிகர குடிநாயக அமைப்புகளும், அறிஞர்களும் பங்கேற்றனர். பல இடங்களில் பாவரங்குகளும், எழுச்சிமிகு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. மாற்று புரட்சிகர, குடிநாயக ஆற்றல் பாவரங்கிலும் பங்கேற்றனர். அனைத்து இடங்களிலும் தமிழ், தமிழ்நாடு, புரட்சியின் மீது பற்றுக்கொண்ட ஆற்றல்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். செங்கை மாவட்டம், பொன்னேரி அரசு கலைக்கல்லூரியில் பு.இ.மு. மாணவத் தோழர்களின் முன் முயற்சியின் பேரில தமிழறிஞரை விடுவிக்ககோரி நானூற்றுக்கும் மேற்பட்டோரிடம் கையொப்பம் பெறப்பட்டு 'ஜெ' அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பலமுறை முயன்றும் சென்னை, வேலூர், திருப்பத்தூர், தருமபுரி, காரைக்குடி, நெல்லை நிகழ்ச்சிகளுக்குக் காவல்துறையினர் அனுமதி மறுத்து விட்டனர். சென்னையில் பிரிவினைக் கோரிக்கை, புலி ஆதரவு என்ற காரணங்களைக் கூறியும், தருமபுரியில் தனிநாடு கோருவதற்கான இயக்கம் எனக் காரணம் கூறியும், நெல்லை, திருப்பத்தூரில் சட்ட ஒழுங்குச் சிக்கல் என்ற காரணம் காட்டியும், காரைக்குடியில் பு.இ.மு.வுக்கு அனுமதி தரக் கூடாது என மேலிடத்து உத்தரவு எனக்கூறியும், நிகழ்ச்சிகளைத் தடை செய்தனர். வேலூரில் எவ்வகைக் காரணத்தையும் முன் கூட்டியே தெரிவிக்காமல் நிகழ்ச்சியின் போது காவலர்களைக் குவித்து இத்தகைய 'தேசப்பகை (விரோத)' இயக்கங்களுக்கு அனுமதியில்லை என்று கூறித் தடைசெய்ததோடு, நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களையும் பகுதி மக்களையும் அச்சமூட்டும் கீழ்த்தரமான முயற்சியிலும் ஈடுபட்டனர். ஈரோட்டில் மாநாட்டிற்கும் பொதுக்கூட்டத்திற்கும் அனுமதி வழங்கிப் தடைவிதித்திருந்த காவல்துறையினர்

(தொடர்ச்சி 9- ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# காவிரித்தாய்!

கர்நாடகத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே காவிரி நீர்ப் பங்கீடு பற்றிய சிக்கல்கள் வரலாற்றுக் காலந்தொட்டு இருந்து வருவனவாகும். 1924-ஆம் ஆண்டு இரு மாநிலங்களுக்கிடையே ஏற்பட்ட காவிரி நீர்ப் பகிர்வு பற்றிய உடன்பாடு 1974-ஆம் ஆண்டு புதுப்பிக்கப் பட்டிருக்கவேண்டும்! அப்பொழுது முதல்வராக இருந்தவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி! கர்நாடகத்தின் அன்றைய முதல்வர். தேவராசு அர்சு காவிரியின் துணையாறுகள் மீது பல அணைகளைக் கட்டினார். காவிரி நீர் பங்கீடுபற்றிப் பேச உயர்மட்ட அரசு அலுவலர்கள் சென்னையில் இருந்து வெங்காலூருக்கும், வெங்காலூரில் இருந்து சென்னைக்கும், சென்றுவந்த வண்ணமிருந்தனர். (OFFICIAL TOUR ON PUBLIC INTEREST) உருப்படியான செயலாக்கமேதுமில்லாமல் மக்களின் வரிப்பணம் பாழாகியதோடுமட்டுமல்லாமல் தமிழக நலனும் குட்டிச்சுவராகியது. அவ்வப் பொழுது சிறுசிறு நிகழ்வுகளைத் தவிர பெரியதாக வேறொன்றும் நடந்துவிடவில்லை புதிய அணைகள் திறப்பு விழாவின்போது அளிக்கப்பட்ட தேநீர் விருந்தில் தமிழினத் தலைவர் கலந்து கொண்டதாக ஒரு செய்தி. இருப்பினும் மின்சாரம் கொடுத்துத் தண்ணீர் பெற்றுக் கொண்டதை யாராலும் மறக்க முடியாது. திருவாட்டி இந்திரா அம்மையார் இந் நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருந்த பொழுது இரு மாநிலங்களுக்கிடையே ஒப்பந்தம் உருவாக இருந்தது. திரு தேவகவுடா பரிந்துரையின் பேரில் திரு. இராமகிருட்டிண எக்டே 345 டி.எம்.சி தண்ணீரைத் தமிழகத்திற்குப் பகிர்ந்தளிக்க இசைந்தார். என்ன காரணியத்தாலோ திரு.ம.கோ.இரா இவ்வுடன்பாட்டை ஏற்கவில்லை.

தமிழகத்தின் மூலை முடுக்குகளில் இருந்து தொடர்ந்து கூக்குரல் எழும்பிக்கொண்டே இருந்ததால் திரு. வி.பி.சிங் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் தலைமை அறமன்றத்தின் மூலம் காவேரி நடுவர் தீர்ப்பாயம் அமைக்கப் பட்டது. வழக்கு முடியும்வரை இடைக்காலத் தீர்வாக (INTERIM AWARD) 205டி எம்.சி தண்ணீரைத்தமிழகத்துக்குக் கர்நாடகம் வழங்க வேண்டுமெனத் தீர்ப்பளித்தது. இடையில் கர்நாடகம் காவேரி உழவர்கள் பாது காப்புச் சட்டமொன்றை முரண்பாடாக இயற்றிக் காவிரி நடுவர் தீர்ப்பாயத்தின் தீர்ப்பை ஏற்க மறுத்தது. இதற்கிடையில் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்பைத் தமிழ்நாட்டின் வற்புறுத்தலுக்குப் பின்னர் நடுவணரசு அரசிதழில் வெளியிட்டு வாயடைத்து ஊமையாக இருந்து விட்டது. கர்நாடகத்தில் இனக்கலகம் கொழுந்துவிட்டு எரியத்தொடங்கியது. கோடிக்கணக்கான உருபா தமிழர் சொத்துகள் அழித்தொழிக்கப்பட்டுத் தமிழர்கள் அடித்து விரட்டப்பட்டனர். இனவெறியர்களான வட்டல் நாகராசுவும் அரசகுமார் சுவைஞர்களும், கர்நாடகக் காவல்துறையும் வன்முறையில் ஈடுபட்டதை இந்த நாடே அறியும்.

கடந்த ஆண்டு தென்மேற்குப் பருவக்காற்று குறித்த நேரத்தில் வீசத் தொடங்கிக் காவிரி நீர் பிடிப்புப்பகுதியில் கடுமழை பெய்ததால் மேட்டூர் அணையின் நீர் மட்டம் இதே நாளில் 92 அடியாக இருந்தது. இன்று நீர்மட்டம் 52 அடியாகும். அரசு தரும் புள்ளி விளத்தங்களின்படி முறைவைத்து ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் விட்டால்கூட அடுத்த பதினைந்து நாள்களுக்கே மேட்டூர் அணையில் உள்ள தண்ணீர் வரும். நட்ட நடவைப் பாதியிலே கைவிட்டுவிட மனமில்லாத உழவர் பெரு மக்கள் முறையீடு செய்யவே, திடுமென முன் அறிவிப்பு இல்லாமலும், அனைத்துக்கட்சியினரைக் கலந்தாயாமலும், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை உடனடியாகச் செயற்படுத்த கர்நாடகத்தை இந்தியரசு பணிக்க வேண்டுமெனக் கோரித் தமிழக முதல்வர் செயலலிதா பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கினார். தந்நலம் இதற்குப் பின்புலமாக இருக்கிறதென்று சிலர் குறை கூறினாலும், தமிழர்களின் உயிர் நாடியான இந்தக் காவிரி நீர்ச்சிக்கலே தலையாயது ஆகும் என்பதை உணர்ந்தே முதல்வர் இப்பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கினார் என் கிறார்கள் சிலர். அனைத்து நிலைகளிலும் தமிழகம் முயன்று தோல்வியே கண்டதால் இவ்வறவழிப் போராட்டத்தைத் தொடங்கியதாகச் செய்தியாளர்களிடம் அவர் கூறியுள்ளார். தலைமை அமைச்சர் நரசிம்மராவ் தமிழக அரசின் கோரிக்கையை ஏற்கக் கூடாதென்று கர்நாடகப் பேராயக் கட்சியினரும், எதிர்க்கட்சித் தலைவர் தேசுபாண்டேயும் முதல்வர் வீரப்ப மொய்லியும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவ்வாறு இந்திய அரசு கர்நாடக நலன்களுக்கெதிராகச் செயற்படுமேயானால் கர்நாடகத்தில் சட்டம் ஒழுங்கு கெடும்( அதாவது பிழைக்க வந்த தமிழர்களைப் பூண்டோடு ஒழித்து விடுவோம் என்ற மிரட்டல்) என்று எச்சரிகை விடுத்தனர். மேலும் தலைமை அமைச்சரை சந்தித்த கர்நாடகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழகத்தின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளக் கூடாது; மாறாக பேச்சுரை நடத்த தமிழகத்தை வற்புறுத்த வேண்டுமெனக் கேட்க, அவ்வாறே செய்வதாக உறுதியளித்தார்.

திரு.வாழப்பாடி இராமமூர்த்தி முதல்வரின் பட்டினிப் போராட்டத்தை வரவேற்ற அதே நேரத்தில், பொதுச் சொத்துகளுக்கு உருபா 100/- கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டு இருப்பதால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது; அதனால் இந்திய அரசு தலையிட வேண்டும் என அறிக்கை விட்டது கொடுமையிலும் கொடுமை!

Scanned with CamScanner

தமிழினத்தலைவர் (!) கலைஞர் இதுவொரு அறிவிக்கப்படாத அடைப்பு என்று பின் வாங்கி விட்டார். தன்மானத் தமிழர் (!) மருத்துவர் இராமதாசு முதல்வர் ஊழலில் இருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள ஏற்படுத்திய நாடாகமென்றார். ஆண்டிக்காண்டி ஓட்டுக் காய்ச்சல் என்ற இழிந்த நிலை தமிழக அரசியல் தலைவர்களிடம் நிறைய இருப்பது மட்டுமன்று தங்கள் காழ்ப்புணர்ச்சியையும் அரிப்பையும் தீர்த்துக்கொள்ளும் களமாகக் காவிரி நீர்ச் சிக்கலைச் சாக்காகப் பயன்படுத்தியது கொடுமையிலும் கொடுமை!

மாறாக திரு. வாழப்பாடியார் காமராசர் நினைவிடத்திலும், தமிழினத் தலைவர் அண்ணா நினைவிடத்திலும் மருத்துவர் இராமதாசு அம்பேத்கார் சிலை அருகிலும் பட்டினிப் போராட்டத்தை நடத்தி இருந்தால் கர்நாடகத்துக்குக் கொஞ்சம் அச்சமாவது இருந்து இருக்கும்! ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிபாடு கொண்டாட்டம் என்பது கர்நாடகத்துக்குப் பொருந்திவிட்டது. தமிழகத்துத் தன்மான அரிமாக்கள் என்றைக்குத் தங்களின் உட்பகையை உடைத்தெறிகிறார்களோ அன்றுதான் காவிரியில் தண்ணீர் வரும். தமிழர்களிடையே உட்பகை நீடித்துக் கொண்டே போனால் கன்னட சாளுவாலிய இன வெறியர்களுக்கு நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைப்பதுபோலாகிவிடும். என்னே தமிழர்கள் ஒற்றுமை!

இனி, இந்திய நீர்வள ஆணையத்தின் தலைவர் திரு.ரெட்டியை வெங்காளூருக்கு அனுப்பி மொய்லியுடன் பேச்சுரை என்ற கண்துடைப்பு நாடகத்தை நடத்தினார் திரு இராவ்! கர்நாடக அணைகளையும் அதன் நீர்மட்டங்களையும் கண்ணால் கூடப் பார்க்காமல் மொய்லி கொடுத்த பொய்யான புள்ளி விளத்தங்களுடன் சென்னை விரைந்து பயனின்றி பேசிவிட்டு டெல்லி விரைந்தார்! அதன் பின்னர் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு வி.சி.சுக்லா இராவின் தூதுவராக வெங்காளூர் விரைந்து மொய்லி காதில் ஏதோ ஊதினார். கர்நாடக நலன்களுக்கு இரண்டகம் செய்ய மாட்டார்களே என்று சொல்லி சுக்லாவை வழி அனுப்பி வைத்தார் மொய்லி! காவிரி நடுவர் தீர்ப்பாயத்தின் இடைக்காலத் தீர்ப்பைச் செயற்படுத்த வேண்டி கண்காணிப்புக் குழுவொன்றை(MONITEERING COMMITTEE) அமைக்க இருப்பதாகவும், காவிரித் தொடர்புடைய மாநிலங்களின் தலைமைச் செயலர்கள், இந்தியரசு நீர்ப்பாசனதுறைச் செயலர், அமைச்சரவை செயலர் ஆகியோர் அடங்கிய குழுவொன்றை அமைக்க இருப்பதாகவும், காவிரிப் படுக்கையில் பயிரேற்றப்பட்டுள்ள குறுவைப் பயிரைக் காப்பாற்ற தலைமை அமைச்சர் இசைவு தெரிவித்து இருப்பதால் பட்டினிப் போராட்டத்தைக் கைவிட வேண்டுமென்று கேட்க, வி.சி.சுக்லா முன்னிலையில் பழச்சாற்றை குடித்து பட்டினிப் போராட்டத்தை நிறுத்திக் கொண்டார் முதல்வர். அதே வேளையில் வீரப்பமொய்லி கண்காணிப்புக் குழுவொன்றை அமைக்க கர்நாடகம் மறுத்து விட்டதாக அறிக்கையும் விடுத்தார்! உலகின் மிகப் பெரிய குடியரசு நாடான இந்தியா அரசியல் ஆதாயத்துக்காக ஒரு போலி நாடகத்தை அரங்கேற்றித் தமிழகத்துக்குப் பட்டை நாமத்தை போட்டுள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால் கர்நாடகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நரசிம்மராவை நேரில் சந்தித்துக் கண்காணிப்புக் குழுவை அமைக்கக் கூடாது என்றும், கர்நாடக நலன்களுக்கெதிராக எந்தவொரு நடவடிக்கையிலும் இந்தியரசு இறங்கக் கூடாதென்றும் வி.சி.சுக்லாவை மேற்கோள்காட்ட, தாம் எந்தவொரு உறுதிமொழியையும் வி.சி.சுக்லாவிடம் அளிக்கவில்லை என்று மறுதளித்தார். ஆக, தலைமை அமைச்சரின் பூனைக்கும் தோழன் பாலுக்கும் காவல் என்னும் இரட்டைப்புனைவு ஏமாற்று நாடகத்தால் தமிழகம் வஞ்சிக்கப்பட்டது. 'நீயும் நானும் ஒன்று; தமிழன் வாயில் மண்ணு' என்ற இளித்தவாய் நிலை தமிழகத்துக்கு ஏற்பட்டுவிட்டது.

நாட்டின் தலைமை வழக்கு மன்றத்தால் (APEX COURT)அமைக்கப்பட்ட காவிரி நடுவர் தீர்ப்பாயத்தின் இடைக்காலத் தீர்ப்பைக் கருநாடகம் ஏற்க மறுப்பது அரசியல் சட்டப்படி குற்றமாகும்!வழக்கு மன்றத் தீர்ப்பை மதியாமையாகும் (CONTEMPT OF THE COURT) கர்நாடகத்தைப் பணியவைக்கும் முழுப் பொறுப்பு இந்திய அரசுக்கே உண்டு! ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு

"The Rich grinds the law;
The Law grinds the poor

கர்நாடகம் சட்டத்தை மிதிக்கும் அதே வேளையில் சட்டம் தமிழகத்தை மிதிக்கும்! அ'தாவது தலைமை வழக்கு மன்றத்தின் தீர்ப்பையே கர்நாடகம் காலில் போட்டு மிதிக்கிறதென்றால் அப்புறம் என்ன ஒருமைப்பாடு வாழ்கிறது? கர்நாடகத்தின் பார்வையில் அரசியல் சட்டப் பிரிவுகள் 256 மற்றும் 356 இரண்டுமே ஏட்டுச் சுரைக்காயாகிவிட்டன! இதில் இந்தியரசு ஏன் ஊமையாக நடிக்க வேண்டும்? (SILENT SPECTATOR). கங்கை ஆற்று நீரை இந்தியாவும் வங்கதேசமும் எவ்வாறு பகிர்ந்து கொள்ளுகின்றன? தாமோதர் ஆற்று நீர் எவ்வாறு பங்கிடப்படுகிறது? சீலம் ஆற்று நீர் பாலைவனத்தில் பாயவில்லையா? உலக நாடுகளுக்கிடையே ஆற்று நீர் பங்கிடும் முறை இந்தியரசுக்கு தெரியாமலா இருக்கும்? '(JUSTICE DELAYED JUSTICE DENIED)' என்ற பழமொழிக் கேற்ப காலம் தாழ்த்திக் காவிரிச் சிக்கலைக் கிடப்பில் போடுவதின் மூலம் உரிமைகள் மறுக்கப்பட்டு வருகிறதென்பது உண்மை! உண்மையிலேயே இந்தியரசு நினைத்தால் அரசியல் வண்ணம் பூசாமல் காவிரி நடுவர் மன்ற இடைக்

காலத் தீர்ப்பை ஒரு நொடியில் செயற்படுத்த முடியும்!

இந்தியா ஒரு நாடென்பது உண்மையானால், அது மக்களாட்சியின் மாண்பை மதிப்பதென்பதும் உண்மையானால், இமயம்முதல் குமரிவரை ஒருமைப் பாடு உண்டென்பது உண்மையானால் இந்தியத் தலைமை வழக்கு மன்றத்தின் தீர்ப்பை இந்தியரசு மதிக்க வேண்டும்! காலம் தாழ்த்தாமல் கர்நாடகத்துக்கும் தமிழகத்துக்கும் நடுநிலையாக இருந்து ஒரு நிலையான உடன்பாட்டை ஏற்படுத்தித் தமிழகத்துக்குக் கிடைக்க வேண்டிய பங்கு நீரைப் பெற்றுத் தரவேண்டும்.

காவிரி நீர்பிடிப்புப்பகுதியில் பெய்த கடுமழையால் கர்நாடக அணைகள் நிரம்பி வழிந்ததால், மேற்கொண்டு நீரைத் தேக்கிவைக்க இயலாததால் காவிரியில் தண்ணீர் விடவேண்டிய தேவை கர்நாடகத்துக்குக் கடந்த ஆண்டு ஏற்பட்டது. ஆனால் காவிரி நடுவர்மன்றத் தீர்ப்பைத் தாங்கள் கடந்த ஆண்டே செயற்படுத்திவிட்டதாக நாகரிகமற்ற முறையில் அறிக்கைவிட்டு இருக்கிறது கர்நாடக அரசு.

வெள்ளக்காலங்களில் அணைகளுக்கு நேர்ச்சி (ஆபத்து) ஏற்படாமல் இருக்க, அதிக அளவுத் தண்ணீரைக் காவிரியில் திறந்து விட எவ்வாறு உரிமையுள்ளதாகக் கர்நாடக அரசு இருக்கிறதோ (கடந்த காலங்களில் முன் அறிவிப்பு இல்லாமல் வெள்ளநீரைத் திறந்து விட்டுத் தமிழகத்துக்கு பேரிழப்பை உண்டு பண்ணியது அனைவருக்கும் நினைவிருக்கும்) அதேபோன்று வறட்சிக்காலங்களில் கர்நாடகம் தேக்கிவைக்கும் நீரில் பங்குகேட்க தமிழகத்துக்கு உரிமை உண்டு. வெள்ளப் பெருக்கினால் வீணாகும் தண்ணீரை இரண்டு மாநிலங்களும் கணக்கில் எடுத்துத் கொள்ளக் கூடாது. வெள்ளப் பெருக்கினால் திறந்து விடும் தண்ணீரை வைத்துத் தமிழகத்துக்கு உரிய பங்குநீரைக் கொடுத்துவிட்டோம் என்ற கர்நாடகத்தின் கூத்து கண்டனத்துக்குரியதாகும்'!

காவிரி மீது கர்நாடகத்தால் கட்டப்பட்ட அணைக்கட்டுகளில் வெள்ளம் ஓய்ந்தபின்பு இருப்பில் உள்ள நீர்மட்டத்தையும் கொள் அளவையும் கணக்கில் கொண்டு தமிழகத்துக்கு 55 விழுக்காடு தண்ணீரைத் திறந்துவிட வேண்டும். அணையில் உள்ள தண்ணீரின் அழுத்தத்தால் நீர் கசிந்து கொண்டே இருக்கும். அதை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. வறட்சியினால் குறிப்பிட்ட அளவுத் தண்ணீரை ஆற்றுமணல் உறிஞ்சிவிடும். எனவே அதையும் பங்கிடும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இன்னும் சொல்லப்போனால் ஒரு நாள் விடுகிற தண்ணீரினால் கர்நாடகத்தில் 50000 காணி பாயுமென்றால், தமிழகத்தில் அவ்வாறு பாய நான்கு நாட்கள் ஆகும். தண்ணீர் கடைமடையைச் சேருவதற்குள் (காவிரிப் படுக்கை) நிறையத் தண்ணீர் வீணாகிவிடுகிறபடியால் அதையும் கணக்கில் கொண்டு கூடுதல் நீரைத் திறந்துவிட வேண்டும். அப்பொழுதுதான் தமிழகம் தனக்குரிய பங்குநீரை முறையாகப் பெற்றதாகக் கருத முடியும்.

வெள்ளப் பெருக்கினால் பெருமளவு நீர் வீணாகிக் கடலில் கலக்கிறது. வறட்சிப் பிடியுள் சிக்கியுள்ள தகடூர் மாவட்ட ஏரிகளில் வெள்ள நீரைத் தேக்கி வைக்க அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்துப் படிப்படியாகத் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும். ஏனெனில் வறட்சிக்காலங்களில் நிலத்தடி நீர் வேளாண்மைக்குப் பயன்படும்.

முடிவுரை:

'கொட்டக் கொட்ட குனிபவனும் முட்டாள்; குனிய குனியக் கொட்டுபவனும் முட்டாள்' என்ற நிலையில் இருந்து தமிழினம் ஒன்றுபட வேண்டும். தமிழகத்துக்கு எல்லா வளங்களும் இருக்கின்றன. நெய்வேலியில் நிலக்கரியும் மின்சாரமும் கிடைக்கின்றன. வெற்றி கொண்டானில் நிலக்கரியும், நரிமணம் பகுதிகளில் கன்னெய்யும், சேலம் பகுதிகளில் இரும்பும் அலமியமும், இன்னும் பல இடங்களில் பல வளங்களும் உண்டு. பல மேலை நாட்டோடு தொடர்பு கொள்ளவும் மீன் வளத்திற்கும் வங்கக்கடல் இருக்கிறது. நிலவளமும் நீர்வளமும் கனிவளமும் காட்டு வளங்களும் நிறைந்திருக்கின்றன. பின்பு ஏன் கொட்டக் கொட்டக் குனிய வேண்டும்? தமிழினமே! காலச் சுழற்சியில் உனது உரிமையை நீயே தீர்மானித்துக்கொள்! ○

—மு. உலகமுதல்வன்

க.மு.,(வர);க.மு.,(அர)க.மு ,(இல)ச.இ.,

பிரிவு அலுவலர் புதுவைப் பல்கலைக் கழகம்.

## இந்தியப் பாராளுமன்றம்!

○ இந்தியப் பாராளுமன்றம் இயங்குவதற்கு ஒரு நொடிக்கு உரு 2060 செலவாகிறது. ஒருமுறை தலைமையமைச்சர் நரசிம்மராவ் துப்புரவுத் தொழிலாளர்களைத் 'தோட்டி' என்று கூறினார். உடனே பாராளுமன்றத்தில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. அந்தக் கூச்சல் குழப்பத்துக்கு ஆன மொத்தச் செலவு உரு 1,23,600.

இந்தியப் பாராளுமன்றத்தின் பொறுப்பற்ற தன்மைக்கு இன்னோர் எடுத்துக்காட்டு. ஒருமுறை இன்றியமையாத பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்து மக்களவையில் ஒரு முகாமையான தீர்மானம் வந்தது. அப்பொழுது அவையில் 545 உறுப்பினர்களில் 20பேர்களே இருந்தனர்; இன்னோர் இன்றியமையாத ஒரு பேச்சின்பொழுது எதிர்க்கட்சிகள் வரிசையில் வெறும் 4 பேர்களே இருந்தனராம்! எப்படி? இந்தியாவில் உள்ள பாராளுமன்ற முட்டாள்களின் மக்கள் பொறுப்பு! மக்களைச் சுரண்டித் தின்னிகள் ஆளும்பொழுது என்ன செய்வது? ○

Scanned with CamScanner

பாவலரேறு ஐயா அவர்களுக்கு-

# பா.ம.க.நிறுவனர் மருத்துவர் இராமதாசு-அவர்களின் மடலும் பாவலரேறு ஐயா அவர்களின் விடை மடலும்.

அன்பு உடன்பிறப்பினர்(சகோதரர்),

தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு மருத்துவர்(டாக்டர்) எழுதிக் கொள்வது:

தங்களின் சிறை வாழ்க்கையைத் தமிழ்ப்பணியாகக் கழித்து வருகிறீர்கள் என்பதை ''இனி'' இதழ்மூலம் அறிந்து ஆறுதலும், பெருமையும் அடைந்தேன்;

உடன்பிறப்பினர் (சகோதரர்) அறிவது, உடல்நலத்தை கட்டாயம்(அவசியம்) பேணிக் கொள்ளவும். தேவையான ஓய்வும் தங்கள் உடல் நலத்திற்கு மிகவும் தேவை (அவசியம்);

தங்களை விரைவில் நேரில் வந்து சந்திப்பேன். பிற தங்கள் நிலைகண்டு.

அன்புடன்,
ச; இராமதாஸ்;

விடை மடல்:

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்'

பேரன்பின் இனிய தமிழ் நெஞ்சீர்,

வணக்கம்; நலமே விளைக:

தாங்கள் அன்புடன் விடுத்த 17-8-93ஆம்-நாளைய மடல் காலத்தே கிடைத்தது; மிக்க மகிழ்ச்சி நன்றி;

ஐயா, நானே தங்கட்கு மடல் எழுத வேண்டும் என்று நினைத்தேன். அதனால் தங்கள் மடல் வந்ததும் பெருமகிழ்ச்சி அடைந்தேன்;

இன்றைய தமிழகச் சூழ்நிலையும் தமிழர்களின் உரிமையற்ற தாழ்ந்த நிலையும் உண்மைத் தமிழினத் தொண்டுணர்வு கொண்ட நெஞ்சங்களைப் பெரிதும் துயர் கொள்ளச் செய்யும் என்பதில் ஐயமில்லை. தங்களைப் போலும் பொதுமக்கள் சாய்கால் கொண்ட, உண்மையான இனநல முயற்சியுடையவர்கள் தக்க நிலையில் சிந்தித்து, இங்குள்ள அனைத்துச் சிறு இயக்கங்களையும் குழுக்களையும் ஒன்றிணைத்து, இவற்றில் கவனத்தைத் திருப்பி,ஒரு விடிவான எதிர்காலத்தை நோக்கிச் செயலாற்றினால் ஒழிய, எதிர்வரும் தமிழினத் தாழ்ச்சி நிலைகளையும் தமிழின எதிரிகளின் சூழ்ச்சி நிலைகளையும் தடுத்து நிறுத்தல் இயலாமற்போகும் என்பதைத் தாங்களும் அறிந்திருப்பீர்கள்.

தனித்தனிக் கட்சிகளாகவும் இயக்கங்களாகவும் இருந்து நாம் இயங்குதல் இனிமேல் பெரும் பயன்தராதென்றே நான் கருதுகிறேன்.

எனவே, தங்களின் தூய இனநல உணர்வால் ஒருங்கிணைய விரும்பும் அனைத்து இயக்கங்களையும் ஒன்றாகக் கூட்டித் 'தமிழின எதிர்காலத் தீர்மானிப்பு மாநாடு'ஒன்றிற்கு ஏற்பாடு செய்துவடிவான உறுதியான ஓரிரு கொள்கைகளை மட்டும் கொண்ட ஒரு பொது அமைப்பை உருவாக்கி, ஒரு கூட்டுத் தலைமைக் குழுவையும் அமைத்துச் செயல்படுவதற்கான முயற்சி ஒன்றைத் தொடங்கவேண்டும் என்று தங்கள்மேல் கொண்ட நம்பிக்கையாலும் நல்லுணர்வாலும் நன்மதிப்பாலும் கேட்டுக்கொள்கிறேன்;

தலைமைக்குழு தவிர, வேறு கருத்தாக்கக் குழு,செயற்குழு, கொள்கை பரப்புக்குழு, போராட்டக்குழு முதலியவற்றையும் அமைத்து அனைவரையும் உறுப்புகளாக்கி ஈடுபடச் செய்யலாம்.

அவற்றுடன் பரவலாகச் செயற்படும்படி மகளிர், இளைஞர்,உழவர். வணிகர்,கல்வியாளர், பணிநிலையாளர், மாணவர் அணிகளையும் அமைத்து விரிவாகச் செயல்படலாம்; இம் முயற்சிகளால் உறுதியாகப் பயன் கிடைக்கும் என்றே கருதுகிறேன்; நம்புகிறேன்;

அருள்கனிந்து இதுபற்றிச் சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்கிறேன்:

இது தொடர்பாகத் தங்கள் கருத்தைத் தெரிவிப்பின் பெருமகிழ்ச்சி அடைவேன்.

பொதுநலம் கருதித் தொண்டாற்றும் அனைத்துத் தோழர்களுக்கும், தலைவர் தீரனார் அவர்களுக்கும் பிற தலைமைப் பொறுப்பாளர் அனைவர்க்கும் என் நலத்தையும் உசாவலையும் வணக்கங்களையும் வாழ்த்துகளையும் கூற வேண்டுகிறேன்.

— அன்பு,நிறை;
—பெருஞ்சித்திரனார்.

ஐயா, என்னைப் பார்க்க வருவதாக எழுதியிருந்தீர்கள். அஃது இயலாததாக இருக்கும்; ஏனெனில் இரத்தத் தொடர்புள்ளவர்களே அனுமதிக்கப்படுகிறார்கள்.

---

○ தொலைக்காட்சிப் பெட்டிகள் செய்வதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சிறிய தீப்பெட்டி அளவில் கூட தொலைக்காட்சிப் பெட்டிகள் வந்துள்ளன. கைக் கடிகாரங்களில் தொலைக்காட்சி அமைந்துள்ளது.

○ வினோபா அடிகள் தாம் துறவு பூணுவதற்கு முன்னரே தாம் கல்லூரியில் பெற்ற பற்பல சான்றிதழ்களை யெல்லாம் தீயிலிட்டுப் பொசுக்கி விட்டாராம். அவற்றை 'அகந்தையின் அடையாளங்கள்' என்று கூறினாராம்; இறுதிவரை அவர் காலணி அணியவில்லை; குடை பிடித்ததில்லை;வெந்நீரில் குளித்ததில்லை; பஞ்சு மெத்தையில் படுத்ததில்லையாம்.

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாநாடு முடிந்து பொதுக்கூட்டம் நடைபெறும் நேரத்தில் அதற்கும் தடையிட்டனர். சிற்றூர் (கிராம)ப்புறங்களில் இருந்து வந்திருந்த பெரும்பாலான உழைக்கும் மக்கள் இத்தடையைக் கண்டித்துத் தன்னியல்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தடையை மீறியதாக ஆறு தோழர்கள் தளை செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர். புதுவையில் காவல்துறையின் மிரட்டல் காரணமாக அரங்க உரிமையாளர் அரங்கைப் பூட்டிவிட்டுத் தலைமறைவாகி விட்டார். பங்கேற்ற வந்திருந்தோரின் விருப்பத்தின்பேரில் மெழுகுத் திரியின் ஒளியில் பூட்டிய அரங்கின் வாயிலிலேயே நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பங்கேற்ற கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. காரைக்குடியில் இரண்டு நாள்களுக்கு முன்பே காவல்துறையினர் அரங்கைப் பூட்டிச் சென்றுவிட்டனர். சென்னை. வேலூர், காரைக்குடி நிகழ்ச்சிகளில் அரங்குக்கு வந்த பெருமளவிலான கூட்டத்தினர் தடையின் காரணமாகத் திரும்பிச் சென்றனர். சென்னையில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் வந்திருந்து திரும்பிச் சென்றனர். காரைக்குடியில் நிகழ்ச்சி தவிர்ப்புச் செய்யப்பட்ட பின்னரும் பொறுப்புத் தோழரின் வீட்டைச் சுற்றி 'கமுக்கக் கூட்டம்' நடத்திடுவோம என்ற அச்சத்தில் ஏராளமான காவல்துறையினர் அலைபாய்ந்து கொண்டு இருந்தனர். தோழர்களின் எச்சரிக்கைக்குப்பின் அவ்விடத்தை விட்டுச் சென்றனர்.

இவ்வாறு காவல்துறையினரால் பல இடங்களில் தடையிடப்பட்டிருந்த போதிலும் மக்களிடையேயான கருத்துப் பரப்புதலை இத்தடைகள் முடமாக்கி விடவில்லை. கட்சி மற்றும் பு.இ.மு. சார்பில் ஓர் இலக்கத்து ஐம்பதாயிரம் துண்டறிக்கைகளும், இருபதாயிரம சுவரொட்டிகளும், பரவலான சுவரெழுத்துகளும் இலக்கக்கணக்கான மக்களிடத்தில் கருத்துப் பரப்பலைக் கொண்டு சேர்த்துள்ளன. நடைபெற்ற இடங்களில் பங்கேற்றவர்களின் எழுச்சியும், கோபமும் தமிழ்த்தேசிய இனத்தின் மீதான ஒடுக்கு முறையை உடைத்தெரியும் கனல்களாக வெளிப்பட்டன.

## புரட்சிகர,குடிநாயக ஆற்றல்களின் பங்கேற்பு:

இந்நிகழ்ச்சிகளில் 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்', 'தமிழர் தேசிய இயக்கம்', தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், 'தமிழ் தேசப்பொதுவுடைமைக் கட்சி' 'தமிழ் நாடு மாணவர் பேரவை; விடுதலைக் குயில்கள்', 'திலீபன் மன்றம்','கருநாடகத் தமிழர் பேரவை', 'அறிவியக்கப் பேரவை', 'தலைநகர் தமிழ்ச் சங்கம்', 'மக்கள் குடியுரிமைச் சங்கம்', முற்போக்கு இளைஞரணி', 'இ.பொ.க. (மா.லெ.)செங்கொடி', நேபாள் பொதுவுடைமைக் கட்சி', 'பகுத்தறிவாளர் கழகம்', 'மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி': 'திராவிடர் கழகம் (இரா)', 'பாட்டாளி மக்கள் கட்சி', 'விடுதலைச் சிறுத்தைகள்', 'தலித் பண்பாட்டுப்பேரவை', 'தமிழ்த் தேசிய மாந்த உரிமைக்கழகம், மற்றும் தி.க.தி.மு.க. 'சனதாதளம்', இந்தியக் குடியரசுக் கட்சி ஆகியவற்றில் உள்ள பல மக்கள நாயக உணர்வாளர்களும், உள்ளிட்ட பல்வேறு புரட்சிகர, குடிநாயக அமைப்புகளும்,தமிழ்த்தேசியச் சிக்கலிலும், தமிழகத் தாழ்த்தப்பட்டோர் விடுதலையிலும் அக்கறையுள்ள அமைப்புகளும், குமுகாய அக்கறை கொண்ட பல உள்ளூர் அமைப்புகளும், பங்கேற்றனர். அரசியல் ஆய்வாளர்கள், தமிழறிஞர்கள், செய்தியிதழாளர்கள், பேராசிரியர்கள். தொழிற் கழகப் படிநிகராளிகள் எனக் குமுகாய வாழ்வின் பல்துறைகளையும், சார்ந்த நூற்றைம்பதுக்கும் மேற்பட்டோர் பங்கெடுத்துக் கொண்டு உரைநிகழ்த்தியுள்ளனர்.

இவ்வாற்றல்கள் அனைவரும் கொடுநெறி செயலலிதா அரசைச் சாடியும், தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களை உடனே விடுதலை செய்திடல் வேண்டுமெனவும் முழக்கமிட்டனர். அதோடு மட்டுமல்லாமல் இச்சிக்கல்களுக்குக் காரணமாயிருக்கின்ற தேசிய ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழிமுறைகள், சாதி ஒடுக்கு முறையைக் குறிப்பாகத் தாழ்த்தப்பட்டோர் மீதான ஒடுக்கு முறையை அகற்றுவதற்கான வழிமுறைகள், தரகு முதலாளிய, நிலக்கிழமை,ஓராட்சி வல்லாண்மைச் சுரண்டல் ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழிமுறைகள், மத ஒடுக்குமுறை, பெண்ணடிமைத்தனம், ஆகியவற்றை ஒழிப்பது எனத் தமிழ்க் குமுகாயம் எதிர்கொண்டுள்ள பல்வேறு சிக்கல்கள் குறித்த கருத்துகளும் இவ்வியக்கத்தில் பலராலும் திறனாய்ப் பெற்றது குறிப்பிடத்தக்கது. பல்வேறு கோணங்களில் தமிழக விடுதலைப் புரட்சிக்கும் இச்சிக்கல்களுக்கும் உள்ள தொடர்பு குறித்து பு.இ.மு. பேச்சாளர்கள் உரைநிகழ்த்தினர்.

அரசின் மிரட்டல்கள், சூழ்ச்சிவலைகள்; தடைகள் ஆகியவற்றை மீறி இவ்வியக்கம் தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களை விடுதலை செய்ய வேண்டும என்ற கருத்துப்பரப்பலையும், இந்தியத் தரகு பார்ப்பனிய வல்லாண்மைக்காரர்கள் மற்றும் அவர்களின் தமிழக அடிவருடிகளின் தேசிய ஒடுக்குமுறைபற்றியும் இலக்கக்கணக்கான மக்களிடம் எடுத்துச் சென்றுள்ளது. தமிழ்க் குமுகாயத்தின் மீது அக்கறை கொண்டுள்ள ஆற்றல்களிடையே ஓர் ஒழுங்கிணைப்பையும் நம்பிக்கையையும் இவ்வியக்கம் ஏற்படுத்தியுள்ளது எனில் மிகையாகாது. O

Scanned with CamScanner

# இட ஒதுக்கீட்டைக் குறைக்கும் உச்ச நெறி மன்ற தடை ஆணையை எரிப்போம்!

தமிழகத்தில் பல ஆண்டுகளாக இருந்துவரும் 69 விழுக்காடு(சதவீகித) இட ஒதுக்கீட்டிற்குத் திடீரென்று உச்சநெறி மன்றம் தடை ஆணை வழங்கியுள்ளது. மொத்த இட ஒதுக்கீடு 50 விழுக்காட்டிற்குள்தான் இருக்க வேண்டுமென்று கூறியுள்ளது. ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் கை வைப்பதாக இத்தடை அமைந்துள்ளது.

69 விழுக்காடு இட ஒதுக்கீட்டை எதிர்த்துச் சென்னை உயர்நெறி மன்றத்தில் வழக்காடித் தோற்றவர் செய்த முறையீட்டில் தமிழக அரசுக்கு அறிவிப்புக்கூட கொடுக்காமல் கமுக்கமாக, உச்சநெறி மன்றம் தடை ஆணை போட்டுள்ளது.

ஏற்கனவே, உச்ச நெறி மன்றத்தில் இட ஒதுக்கீடு-தொடர்பாக நடந்த வழக்கில் 50விழுக்காட்டிற்கும் மேலாக இட ஒதுக்கீடு வழங்கலாமென்று நடுவர் ஓ.சின்னப்ப(ரெட்டியா)ர் தனித் தீர்ப்பளித்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மண்டல் குழுவும் நடைமுறையில் 50விழுக்காட்டிற்கும் மேலிருந்தால் அது நீடிக்கலாம் என்று கூறுகிறது.

## பார்ப்பனியம் என்னும் நஞ்சு!

இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு, இந்த உச்சநெறிமன்றம் தன் பார்ப்பனக் கரிசனத்தை (விசுவாசத்தை)க் காக்க, வேதவழி(சனாதன) நெறியை(தர்மத்தை)நிலைநாட்ட, சாதியத் திமிரோடு மீண்டும் தன் தீர்ப்புகளைத் திருத்தி எழுதி இருக்கிறது. இம் மண்ணில் வாழ்கிற கோடிக் கணக்கான தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஏழை எளிய மக்களின் எதிரிதான் என்பதை இட ஒதுக்கீட்டுக்குத் தடை செய்ததன் மூலம் உச்சநெறி மன்றம் மீண்டும் ஒருமுறை மெய்ப்பித்துவிட்டது.

— எந்தப் பார்ப்பனியம் அன்று இம்மண்ணின் மைந்தர்களை சூத்திரர்கள் என்றும், சண்டாளர்கள் என்றும் உழைக்கும் மக்களை அடிமைப்படுத்தியதோ,

— எந்தப் பார்ப்பனியம் தனது நச்சுக் காற்றால் தனது குறுக்கு அறிவால் தமிழரின் பண்பாட்டுத் தளங்களை - அழிவுப்படுத்தியதோ,

— எந்தப் பார்ப்பனியம் அன்று ஏகலைவனின் கட்டைவிரலை வெட்டியதோ, சம்புகனின் உயிரைக் குடித்ததோ, நந்தனைச் சாம்பலாக்கியதோ,

— அதே பார்ப்பனியம் தனது சாதியக் கொடுக்கால் இன்றும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை மீண்டும் மீண்டும் கொட்டிக்கொண்டிருக்கிறது என்பது வெள்ளிடைமலை. மக்கள் தொகையில் 5 விழுக்காடே உள்ள பார்ப்பனர்கள் நடுவண் அரசு வேலைகளில், முகாமைப் பதவிகளில் 60விழுக்காட்டிற்கும்மேல் இருப்பது என்ன ஞாயம்? டி.வி.எசு. போன்ற தனியார் நிறுவனங்களிலும் எல். ஐ. சி. தொடர் வண்டித்துறை போன்ற தனியார் நிறுவனங்களிலும் 'பூணூல்' ஆட்சிதான் நடக்கிறது என்பதை அடித்துச் சொல்லலாம். (புள்ளி விளக்கம் கீழே.)

இந்திய மக்கள் தொகையில் 52 விழுக்காடு இருக்கிற பிற்படுத்தப்பட்டோர் நிலை எங்கே? வெறும் 5 விழுக்காடுகூட இல்லாத பார்ப்பனர் நிலை எங்கே? ஞாயமின்மை இல்லையா? ஒழுக்கக்கேடு இல்லையா? கொடுமை இல்லையா? இப்போது சொல்லுங்கள். நாம் கேட்பது ஞாயமா, இல்லையா என்று.

## இதோ, புள்ளி விளக்கம்!

நடுவண் அரசுப் பணிகளில் கடந்த 45ஆண்டுகளாக நடந்த கொடுமையைக் கொஞ்சம் பாரீர்!

| துறைகள் | மொத்த வேலை | பார்ப்பனர்கள் | தாழ்த்தப்பட்டோர் (SC/ST) | பிற்படுத்தப் பட்டோர் (BC) |
|---|---|---|---|---|
| 1. குடியரசுத்தலைவர் | 49 | 45 | 4 | 0 |
| 2. துணைக் குடியரசுத்தலைவர்-அலுவலகம் | 7 | 7 | 0 | 0 |
| 3. அணுவாற்றல் துறை | 34 | 34 | 0 | 0 |
| 4. வாணிகப் பொருள், கூட்டுறவு | 61 | 50 | 11 | 0 |
| 5. தொலைத் தொடர்புத் துறை | 52 | 47 | 5 | 0 |
| 6. கல்வி, குமுகத்துறை | 259 | 238 | 17 | 0 |
| 7. பொருள் துறை( நிதித்துறை) | 1008 | 941 | 66 | 4 |
| 8. தாழ்த்தப்பட்டோர் நலத்துறை | 10 | 9 | 1 | 0 |

அடிப்படை: மண்டல் குழு அறிக்கை.

**தகுதி, திறமை வாய்ந்த 'பூணூல்' கும்பல்!**

திறமையற்ற பிற்படுத்தப்பட்டோரும் தாழ்த்தப்பட்டோரும் அரசு 'ஆளுமையில் ஈடுபட்டால் அரசு இயந்திரத்தின் தரம் தாக்க்முறும் என்ற குற்றச்சாட்டை வைக்கிறார்கள், இந்தப் பூணூல் போட்ட 'புண்ணிய'வான்கள். தகுதி, திறமை பற்றிப்பேசுவதற்கே தகுதியற்ற,பொருத்தமற்ற,அறத் தகுதியற்ற கூட்டம் இந்தத் கருத்தை முன் வைப்பதுதான் நமக்கு வேடிக்கையாக இருக்கிறது; வியப்பாகவும் இருக்கிறது.

O திறமை வாய்ந்த இந்தப் பூணூல் கும்பல்தானே இந்தியா உரிமை(சுதந்திரம்) பெற்றதிலிருந்து இன்றுவரை ஆட்சி செய்கிறது.திறமையாக ஆள வேண்டியதுதானே!

O தகுதி, திறமை வாய்ந்த இந்தக் கயவர்கள்தாமே இந்தியாவை ஐ எம்.எப் க்கும், உலக, வைப்பகத்திற்கும் அடகு வைத்தவர்கள்.

O இந்தக் கயவர்கள் ஆட்சியில்தானே 'போபர்சு ஊழல், நீர் மூழ்கிக் கப்பல் ஊழல். ஐயாயிரம்கோடி அர்சத் மேத்தா ஊழல் போன்றவை மிகத் 'திறமையாக' நடைபெற்றன.

O இழிவு, உயர்குடி(விஸ்கி) புட்டில்களுக்காக இந்திய நாட்டின் கமுக்கங்களை விற்றவர்கள் இந்த மேல்சாதித் திறமைசாலிகள் தாமே!

ஆர்.எசு.எசு.வெறியர் சோ சுசாதா அருண்சோரி போன்ற முதலாளியக் கழிசடைகள். ''இடஒதுக்கீட்டில் அதிகமாக வலலாளுமை ஆற்றல்களே பயன் பெறுகின்றன', 'மேல்சாதியிலும் ஏழைகளே இல்லையா?'', என்றெல்லாம் நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர். ஏழைகள்பால் உள்ள அன்பால் அன்று சாதீயத் திமிரால் பேசுகிற பேச்சுக்களே இவை.

**போர்க்கொடி தூக்குவோம்!**

மூவாயிரம் ஆண்டுகளாக நம் முதுகின் மீதும் மூளையின் மீதும் உட்கார்ந்து கெண்டு ஓட்டிக் கொண்டிருக்கும் பார்ப்பன வல்லாண்மைச் சாதியை இனிமேலும் நாம் சுமக்க அணியமாக இல்லை. எதிர்த்துப் போர்க்கொடி தூக்கவேண்டிய நிலை! நம் தோள்மேல் சுமத்தப்பட்ட கடமை இது; இன்றைய காலத்தின் தேவை—கட்டாயம்! பல ஆண்டுகளாகப் போராடிப் பெற்ற உரிமை, இந்த இட ஒதுக்கீடு. இதை நாங்கள் இழக்க விரும்பவில்லை.

O சாதீயத்தின் சல்லிவேர்கள் இம்மண்ணில் சாகாத வரை, இடஒதுக்கீடு இருக்கத்தான் செய்யும்!

O பார்ப்பனியக் கொடுக்கு முழுவதும் வெட்டப்படாத வரை எங்களுக்கு இடஒதுக்கீடு இருந்தே ஆகவேண்டும்.

**மாணவர்களே! இளைஞர்களே!**

O நம் உரிமை மேல் கை வகைக்கும் இந்த உச்ச அறமன்ற தடை ஆணையைத் தீ நாக்குக்குத் தின்னக் கொடுப்போம்;

O பகுத்தறிவுப் பகலவன் பெரியார், அண்ணல் அம்பேத்கார் வழி நடக்க உறுதி எடுத்து இட ஒதுக்கீட்டுக்கான போராட்டத்தை நாம் தொடர வேண்டும்!

O தாழ்த்தப்பட்ட-பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒற்றுமைக்காகப் போராடுவோம்.

O இட ஒதுக்கீடு நம் உரிமை என முழங்குவோம்!

**தமிழக இளைஞர் இயக்கம்.**

(தமிழ்ப்படுத்தம் 'தமிழ்நிலம்). O

# தென்மொழியோய் வாழ்க!

*'தனித்தமிழ்ப்பாப்புலி'*—தரங்கை. பன்னீர்செல்வன்.

மக்களாட்சி வாய்ப்பாலே நாட்டை
மயக்குகின்ற கட்சிகளால், தமிழர்
செக்குமாடாய்ச் சுழல்கின்றார்; போலிச்
சீர்திருத்த மேடையோரை நம்பி
மக்குகளாய் உழல்கின்றார்; மறிமா
மந்தைகளாய் அலைகின்றார்; அதனல்
கொக்கரிக்கும் கொள்ளையாட்சி தமிழைக்
கொட்டடிக்குள் முடக்கியதே,
கொடுமை!

சீர்த்தெழுந்த தமிழரியே, உன்னைச்
சிறைக்கோட்டம் என்னசெய்யும்?
உன்றன்

ஆர்த்தெழுந்த மொழித்தீயை, இங்கே
அணைத்திடற்கு யார் பிறந்தார்?
மானப்

போர்த்தொழிலால் வென்றெடுக்கும் ஈழப்
புத்துயிர்ப்பே நீயன்றோ? பெரியார்
கூர்த்தமதிக் குறியீடே, கொள்கைக்
குறிதவருத் தென்மொழியோய்
வாழ்க!

பாவேந்தர் பிறங்கடையே! என்றன்
பாட்டெழுச்சிப் பூட்டகமே! என்றும்
சாவேந்தாத் தமிழினத்துச் சான்றோய்:
சலிப்படையாத் தமிழீழ வேங்கை
நாவேந்தும் இனமுரசே, சிறையில்
நாடோறும் காழ்ப்பேறும் தமிழக்
கோவேந்தே! சிறையுன்றன் உதிரும்
குறுமயிரால் பெருமையுறும்! வாழ்க!

(நன்றி: 'எழுகதிர்' சூலை 93)

Scanned with CamScanner

TN/SM (C)657

# சிறையிருக்கும் செந்தமிழே!

-பறம்பை அறிவன்-

உறைநீக்கி வாராய் தமிழ்வாளே! மேகத்
திரைநீக்கி வாவா தமிழ் நிலவே!
சிறையிருக்கும் அண்ணு, உனக்கேன், காவல்?
தமிழிருக்க நீயிருப்பாய் அன்ருே?

அரசிடத்தும் மக்களிடத்தும் பேசி, உன்னை
விடுவிக்க வேண்டும் என்பார்கள்!
நீயோ,என் தமிழினத்தை விடுவியாமல்
விடிவில்லை வீடில்லை என்பாயே!

துரைமா எனுமென் அரிமாப் பாவல!
சிறையுன்னைச் செய்யப் போவதென்ன?
இடம்மாறத் தமிழெண்ணம் மாருதவன்
உடம்போடு உயிரிணைந்த, தமிழ்,நீதான்!

செயலை நடப்பை அறிந்தவை கொண்டு
மெய்யியலை ஆக்கும் மெய்ம்மைப் பித்தா!

அயலே ஆயிரம் சிறப்புள வாயினும்
அருந்தமிழ் இனமானச் சிறப்பே எண்ணுவாய்!

இடும்பை உடம்புக் கியல்பெனும் கொள்கை
அறிந்த எழுஞாயிறே உன்னை யிட்ட
சிறைதான் அறியாமை கொண்ட தறிவேன்;
விரையும் உன்னெழுத் தெண்ணம் செயலாய்!

செந்தமிழே! சிறையிருக்கச் செய்த சூழ்ச்சி
சிதறிவிடும்; சிலை,கணையால் பேசும் காலமோ?
வினைமேல் தமிழறம் பேசும் வெற்றியைத்
தினையளவும் செய்யுமோ, படையாட்சி
முறைதான்!

பாட்டெழுத எண்ணேன், நீயதற்கே
பாடும் குயிலென்பதால்;
நாட்டுன் பகைவீழும்; பேசும் எழுதும்
நினைக்கும் உரிமைக்குத் தடையில்லை!

---

## தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்!

O தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், இந்தியாவைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லும் கட்சியன்று; அவர்கள் இலங்கையைத்தான் பிரிக்க வேண்டும் என்று கூறுகின்றனர். மேலும் இராசீவ் கொலை ஒரு குற்றம்(Crime).தேசப்பகையான நடவடிக்கை அன்று. விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தாம் இராசீவைக் கொன்ருர்களா என்பது அறமன்றத்தில் மெய்ப்பிக்கப்படவேண்டிய செய்தி. எனவே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மேல் குற்றம் சாட்டி அதைத் தடைசெய்ய முடியாது என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்களில் ஒருவரான பண்ணுருட்டி இராமச்சந்திரன் கூறுகிருர். O

---

**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு: 80**

ஆட்சி : செங்கோல், கடுங்கோல், கொடுங்கோல் என்று மூவகைப்படும். செங்கோல், நேரிய ஆட்சி; கொடுங்கோல் கொடுமை ஆட்சி, கடுங்கோல் கடுமை ஆட்சி.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 165

அனுப்புதல்:
**தமிழ்நிலம்**
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர் :

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

தமிழர் ஒவ்வொருவரும்
கட்டாயம் படிக்க வேண்டிய
இதழ்கள்! தமிழ்நிலம்,
தென்மொழி, தமிழ்ச்சிட்டு

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணாசலத் தெரு, சென்னை-5.

Scanned with CamScanner